10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 85 திங்கட்கிழமை ஓகஸ்ட் 07 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## தேர்தல்கள் ஒத்திவைப்பதை விரும்பவில்லை



தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதை தேர்தல் ஆணைக்குழு விரும்பவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் அரசாங்கம் இரண்டு சட்டங்களை அறிமுகம் செய்ய உத்தேசித்துள்ளதாகவும் இவ்வாறு சட்டங்களை அறிமுகம் செய்தால் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் குறைவு எனவும் அவர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் கொண்டு வரப்படும் சட்டங்களின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர் தேர்தல்கள் தொடர்ச்சியாக ஒத்திவைக்கப்படுவதை தேர்தல் ஆணைக்குழு விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (உ)

# கிணற்றில் கிடந்த வெடிபொருட்கள்




கிளிநொச்சி, மலையாளபுரத்தில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றில் இருந்து பெருமளவான வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

போர் நடைபெற்ற போது, இந்தியாவுக்குத் தப்பிச் சென்று, கடந்த வருடம் நாடு திரும்பிய சின்னையா சுப்பிரமணியம் என்பர் தனது காணியில் உள்ள தோட்டக் கிணற்றை நேற்று தூர்வாரியுள்ளார். அதன்போதே கிணற்றின் அடியில் 06

## ஊழலுக்கு இடமில்லை



ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படாது என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள் பற்றிய ஊழல் மோசடிகள் குறித்தும் விசாரணை நடத்தப்படுவதாகவும் இதன் ஊடாக அரசாங்கம் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோரைக் காப்பாற்றவில்லை என்பது புலனாகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ)

## பயங்கரவாதச் சட்டத்தில்
# விக்ரர் உட்பட ஆறு பேர் கைது
### வாள் வெட்டில் தொடர்புடையவர்களாம்



யாழ். கொக்குவில் பகுதியில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் ஆறு பேர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்த தேடுதல் நடவடிக்கைகளின் பின்னர் இன்று காலை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வாள்வெட்டு சம்பவத்துக்குத் தலைமை தாங்கிய பிரதான சந்தேகநபர் என அண்மையில் பொலிஸ்மா அதிபரால் குறிப்பிடப்பட்டிருந்த விக்ரர் உள்ளிட்ட நால்வர் கொழும்பில் வைத்தும் ஏனைய இருவர் யாழ்ப்பாணத்தில் வைத்தும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. 06

## நம்பிக்கை சிதறிவிட்டது



மக்களின் நம்பிக்கை சிதறடிக்கச் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது நம்பகத் தன்மையைக் கட்டியெழுப்புவதற்கு சிரமப்படக்கூடுமென அவர் குறிப்பிட்டுள்ளார். பிணைமுறி மோசடிகள் தொடர்பில் ரவி கருணாநாயக்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் சர்வதேச அரங்கில் ரவி கருணாநாயக்கவின் நம்பகத்தன்மை தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். குற்றச் சாட்டுக்கள் காரணமாக வெளிவிவகார அமைச்சரின் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதை மறுப்பதற்கில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

### தொடரும் வேட்டை
## 48 மணித்தியாலத்தில்
# 49 பேர்

கடந்த சனிக்கிழமை அதிகாலை முதல் இன்று அதிகாலை வரையான 48 மணித்தியாலத்தில் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு மற்றும் வீதிச் சோதனை நடவடிக்கைகளின்போது 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடாநாட்டின் சில பிரதேசங்களில் இன்றும் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் மக்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு தோன்றியுள்ளது. மாலை வேளைகளில் விசேட அதிரடிப்படையின் “பீல்ட் பைக் குறூப்“ சந்திகளில் திடீரெனத் தோன்றி சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின்போது சனிக்கிழமை மாலை அடையாள அட்டை இல்லை எனக்கூறி கோண்டாவிலில் 12 இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

வடமராட்சி, துன்னாலையில் நேற்றும் நேற்றுமுன்தினமும் மூன்று தடவைகள் முழுமையான சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன்போது 06

## தே.அ.அட்டை இல்லாத 18 பேர் கைதாகி விடுவிப்பு

வடமராட்சியின் துன்னாலை, கரவெட்டிப் பிரதேசங்களில் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து இன்றும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது அடையாள அட்டை இன்றி பயணித்தனர் எனக்கூறி சுமார் 18 பேர்வரை கைது செய்யப்பட்டனர். அவர்கள் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அவர்களின் கைவிரல் அடையாளங்கள் பெறப்பட்டுள்ளன. அதன்பின்னர் அவர்கள் அனைவரும் நெல்லியடிப் பொலிஸாரினால் தலா ஒரு ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இத் தொடர் கைது நடவடிக்கைகளால் அப்பகுதியில் பதற்றநிலை மேலும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## யாருக்கும் அதிகாரமில்லை



நீதிமன்றத்தின் சுயாதீனத்தில் தலையிட ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட யாருக்கும் எதுவித அதிகாரமும் இல்லை என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகள் பற்றி நீதியமைச்சரிடம் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்டபோது பதிலளித்த அவர்,

“நீதியின் சுயாதீனத்தையோ அல்லது நீதிமன்றத்தின் செயற்பாடுகளையோ விமர்சிப்பதற்கு யாருக்கும் அதிகாரமில்லை. அண்மையில் அமைச்சர் அஜித் பெரேரா இது குறித்த மிகவும் மோசமான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

நீதிமன்றின் நகர்வுகள் குறித்த செயற்பாடுகளின் பொறுப்பை என் மீது சுமத்த அவர் முயற்சிக்கின்றார். ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளில் சட்டம் ஒழுங்காகச் செயற்படும். நாம் எச்சந்தர்ப்பத்திலும் சட்டத்தைக் கையில் எடுக்கவோ விமர்சிக்கவோ கூடாது” - என்றார். (எ)

# ஆயுள் தண்டனையாக மாறிய மரணதண்டனை

குவைத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு இலங்கையர்களை தண்டனையிலிருந்து மீட்டு எடுப்பதற்கு இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குவைத்தில் சக இலங்கையர் ஒருவரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரையும் வீட்டுப் பணிப்பெண்ணாக குவைத் சென்று போதைப் பொருள் விற்பனை செய்தார் எனக் குற்றம் சுமத்தி மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பெண் ஒருவரையுமே மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குவைத் வாழ் இலங்கையர்களின் நிதி உதவியுடன் மேன் முறையீட்டின் மூலம் நட்டஈட்டை வழங்கி, இரு இலங்கையர்களும் மரண தண்டனையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (உ)

# சோனகத் தெருவில் நூலகம் திறப்பு





யாழ்ப்பாணம், சோனகத்தெருவில் நீண்டகாலம் நிலவிய நூலகத் தேவை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

ஜே.ஓ. 74 நிறுவனத்தினால் நேற்று அப்பகுதியில் நூலகம் ஒன்று திறக்கப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவித்த போதே மக்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நூலகம் நேற்றுக் முற்பகல் 10 மணியளவில் 136 கலீபா அப்துல் காதர் வீதியில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவில் ஜே.ஓ. 74 நண்பர்கள், மஸ்ஜித் முஹம்மதியா, ஜூம்மா பள்ளிவாசல் தலைவர் ஏ.சி முபீன், எழுத்தாளர் இக்பால், மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் லாபிர் ஆகியோர் கலந்துகொண்டனர். 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய நண்பர்கள் இணைந்து ஜே.ஓ. 74 அமைப்பை உருவாக்கி இப்பகுதியில் பல்வேறு சேவைகளைச் செய்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (உ)

## பஸ்ஸில் பயணித்த ரணில்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை ஹட்டன் சென்றார். ஹட்டன் டிப்போவினால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஹட்டனிலிருந்து மட்டக்களப்புக்கான பஸ் சேவையை ஆரம்பித்து வைத்து, பஸ்ஸில் சிறிது தூரம் பயணம் செய்தார். (உ)

## இசை வெளியீடு



வேலணை வடக்கு, இலந்தவனப்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் மீது பாடப்பெற்ற இசைப்பேழை வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வேலணையூர் சாமி புத்தனின் வரிகளில் இசைவாரிதி வர்ஷனின் இசையமைப்பில் தென்னிந்திய பாடகர்களான டாக்டர்.நாராயணன், அனந்து, செந்தில்தாஸ்,முகேஷ் வர்ஷன் மற்றும் நம்நாட்டு பாடகி லம்பி காத்வனி ஆகியோரால் பாடல்கள் பாடப்பெற்றன. (உ)

## நல்லாட்சி பற்றிப் பேசுவது நகைப்புக்குரியது

மக்களின் வாக்குரிமையைப் பறித்துக் கொண்ட இந்த அரசாங்கம் நல்லாட்சி பற்றிப் பேசுவது நகைப்புக்குரியது என தென் மாகாணசபை உறுப்பினர் இசுர தொடங்கொட தெரிவித்துள்ளார்.

பெத்தேகம தேர்தல் தொகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், “இந்த அரசாங்கம் ஆட்சி அமைத்து இரண்டு ஆண்டுகளில் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை. அனைத்து சக்திகளையும் அடக்குமுறைக்கு உட்படுத்தவே இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. இந்த அரசாங்கத்துக்கு வேறு எதனையும் செய்யத் தெரியவில்லை. பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் அன்று வாக்களித்த மக்கள் இந்த அரசாங்கம் தொடர்பில் எதிர்பார்ப்பு இழந்திருக்கின்றார்கள். ஜனநாயக ரீதியில் மக்களின் உரிமைகளை இந்த அரசாங்கம் பறித்து வருகின்றது - என்றார். (உ)

## பயிற்சிப் பட்டறை




இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், திருகோணமலைக் கிளையினால் தெரிவுசெய்யப்பட்ட தொண்டர்களுக்கான ”மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு” பயிற்சிப் பட்டறை நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைவர் டாக்டர் ஈ. ஜீ. ஞானகுணாளன், கிளை நிறைவேற்று அதிகாரி டாக்டர். என். ரவிச்சந்திரன், மட்டக்களப்பு கிளை நிறைவேற்று அதிகாரி பிரேம்குமார், கொழும்பு, இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தமித்த சானாக மற்றும் முன்னாள் மாவட்ட அனர்த்த அதிகாரி முஹைஜிர் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ)

## நூதன முறையில் போதை வியாபாரம்



மிகவும் நூதனமான முறையில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படும் முறைமை பற்றி பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

தொலைபேசிகளின் ஊடாக பணத்தைச் செலுத்தியதன் பின்னர் மின்சாரக் கம்பங்களில் சுவிங்கத்தைப் பயன்படுத்தி போதைப் பொருட்களை ஒட்டிவிடும் நூதன போதைப் பொருள் வர்த்தக முறை தொடர்பில் பொலிஸார் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு போதைப் பொருள் விற்பனை செய்யும் கும்பலைச் சேர்ந்த இரண்டு பேரை ஹிமதுரவ பொலிஸார் கைது செய்துள்ளனர். மின்சாரக் கம்பத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவிங்கம் ஒன்றிலிருந்து 100 மில்லிகிராம் எடையுடைய போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளன. (உ)

# போதை வியாபாரத்தில் பிரபல அமைச்சரின் சாரதி


இளைஞர், யுவதிகளுக்கு போதை மாத்திரைகள் உட்பட போதைப்பொருள் விற்பனை செய்யும் குழுவொன்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் விநியோகம் செய்யும் குழுவினர் ஜீப் வண்டியில் பயணிக்கும் போது கல்கிசை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குழுவினர் பயணம் செய்த ஜீப் வண்டியைச் செலுத்தியதாகக் கூறப்படும் நபர் பிரபல அமைச்சர் ஒருவரின் சாரதி என கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்ட சாரதி அண்மையில் பதவி மாற்றம் செய்யப்பட்ட பிரபல அமைச்சரின் சாரதி என கூறப்படுகின்றது. இச் சோதனை நடவடிக்கையின்போது கடற்கரை விருந்துகளுக்காக பயன்படுத்தப்படும் ஒவ்வொன்றும் 7500 ரூபா பெறுமதியுடைய 12 போதை மாத்திரைகள், குஷ் எனப்படும் போதைப்பொருள் 10 கிராம் மற்றும் 3 கிராம் கொக்கெய்னும் மீட்கப்பட்டுள்ளன. சட்டவிரோதமான 9 புகையிலை பைக்கெற்றுகளும் அங்கிருந்து பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன. (உ)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்
விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்
தொடர்புகளுக்கு : 021 300 4848

# ஆப்கானில் கோரம் 50 அப்பாவிகள் சாவு




ஆப்கானிஸ்தானின்வடக்கு பகுதியில்உள்ள சரிபுல் மாகாணத்தில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய கொடூரத் தாக்குதலில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். "குறித்த தாக்குதலில் மிகவும் கொடூரமான முறையில் மனிதாபிமானமற்ற நிலையில் பலர் கொல்லப்பட்டனர். இதன்போது ஆப்கான் பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஏழு பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் தலிபான் மற்றும் ஐ.எஸ் இயக்கத்தினர் அடங்கிய குழுவினர் ஈடுபட்டனர்" என மாகாண ஆளுநர் சபிநுல்லா அமானி தெரிவித்துள்ளார். எனினும் இந்தத் தாக்குதலில் தாம் ஈடுபடவில்லை என தலிபான்கள் மறுத்துள்ளனர். தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து பாதுகாப்பு படைகள் மற்றும் ஆப்கான் விமானப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். (இ)

# பன்னீரைக் கொல்லும் முயற்சி முறியடிப்பு





திருச்சி விமான நிலையத்தில் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தை, கத்தியால் குத்திக் கொலை செய்யும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சென்னையிலிருந்து திருச்சிக்கு விமானம் மூலம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பகல் 11 மணியளவில் வந்தடைந்தார்.
விமான நிலையத்தில் அதிமுகவின் இரு அணிகளின் இணைப்பு குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர், அதற்கு ஓ.பன்னீர் செல்வம் பதிலளித்துப் பேசிக் கொண்டிருந்துள்ளார்.
அப்போது சோலைராஜா என்ற முடிதிருத்தும் தொழிலாளி (30 வருடமாக அதிமுகவில் உள்ளவர், ஓபிஎஸ் அணியின் ஆதரவாளர்) ஓபிஎஸ்ஸை வரவேற்பதற்காக திருச்சி விமான நிலையத்துக்கு வந்துள்ளார்.
அப்போது ஓ.பன்னீர்செல்வத்துடன் புகைப்படம் எடுக்க முற்பட்டுள்ளார்.
எனினும் அவரது நடத்தைகள் சந்தேகமாக இருக்கவே, அவரைச் சோதனையிட்டனர் மத்திய பாதுகாப்புப் படை அதிகாரிகள். இதன்போது அவரிடமிருந்த கத்தியைக் கண்டுபிடித்தனர்இதனையடுத்து அவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். உண்மையிலேயே அவர் பன்னீர்செல்வத்தைக் கொல்லத்தான் வந்தாரா, அல்லது தற்செயலாகக் கத்தியை வைத்திருந்தாரா என்பது குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.(இ)

# ஆதிவாசிகளாக மாறி விவசாயிகள் போராட்டம்

உடலில் இலை, தழைகளைக் கட்டியபடி தமிழக விவசாயிகள் நேற்று டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கடன் தள்ளுபடி, விளைபொருட்களுக்கு இலாபகரமான விலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழக விவசாயிகள் டெல்லி ஜந்தர்மந்தரில் தொடர் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.தினமும் நூதனமான முறையில் போராட்டம் நடத்தி வரும் விவசாயிகள், நேற்றுமுன்தினம் உடலில் சேறு பூசிப் போராட்டம் நடத்தினர்.
இந்நிலையில் நேற்று போராட்டக்குழு தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் விவசாயிகள் உடலில் இலை, தழைகளைக் கட்டியபடி ஆதிவாசிகள் போல ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தினர். இதில் சிலர் மனித மண்டை ஓடுகளைக் கழுத்தில் தொங்கவிட்டபடியும் கலந்து கொண்டனர்.
"பிரதமர் நரேந்திரமோடி தேர்தல் பிரசாரத்தின்போது, இந்தியாவை 'டிஜிட்டல்' மயமாக்குவோம் என்று கூறினார். ஆனால் விவசாயிகளின் தற்போதைய நிலைமை கற்காலத்தை நோக்கிச் செல்வது போல உள்ளது. இதனை உணர்த்தும் வகையிலேயே உடலில் இலை, தழைகளைக் கட்டிக் கொண்டு ஆதிவாசிகள் போல நூதன போராட்டத்தில் ஈடுபட்டோம்" என விவசாயிகள் தெரிவித்தனர். (இ)

# அமெரிக்கா அழியும் வடகொரியா சூளுரை

அமெரிக்கா கொண்டுவந்த புதிய பொருளாதாரத் தடையை ஐ. நா. சபை ஏற்றுக் கொண்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள வடகொரியா, அமெரிக்காவை அழித்தொழிக்கப் போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.
புதிய பொருளாதாரத் தடை காரணமாக வடகொரியாவின் ஏற்றுமதி கடும் வீழ்ச்சியைச் சந்திப்பதோடு, வெளிநாடுகளில் இருந்து வரும் முதலீடுகளும் மட்டுப்படும். இதனால் கடும் பொருளாதார நெருக்கடியை வடகொரியா சந்திக்க நேரிடும்.
கடந்த ஜூலை மாதம் வடகொரியா மேற்கொண்ட கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைக்குப் பதிலடி தரும் வகையிலேயே ஐ.நாவின் துணையோடு, அமெரிக்கா இந்தப் பொருளாதாரத் தடையைக் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் இந்தப் பொருளாதாரத் தடையின் மூலம், அமெரிக்கா தன் அழிவுக்கு வழிவகுத்துள்ளதாக வடகொரியா காட்டமாகக் கூறியுள்ளது. (இ)

# நாஸி வணக்கத்தால் சீனர்களுக்கு சிக்கல்



ஜேர்மனி நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இருவர், ஹிட்லரைப் போல் வணக்கம் செய்த குற்றத்துக்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சீனாவைச் சேர்ந்த இருவர் ஜேர்மனிக்குச் சுற்றுலா சென்றுள்ளனர். ஜேர்மனியின் தலைநகரான பெர்லினில் நேற்று பொது இடத்தில் , இருவரும் ஹிட்லரை போல் நின்று ஒரு கையை உயர்த்தி வணக்கம் (நாஸிக்களின் வணக்கம்) செய்வது போல புகைப்படம் எடுத்துள்ளனர்.
இந்தச் சம்பவம் குறித்து தகவல் அறிந்த பொலிஸார் இருவரையும் உடனடியாகக் கைது செய்தனர். பின்னர், 500 யூரோ பிணையில் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.
ஜேர்மன் நாட்டை 1933 முதல் 1945 வரை ஆட்சி செய்தவர் ஹிட்லர். இரண்டாம் உலகப்போர் மூள்வதற்கு காரணமான ஹிட்லரின் முக்கிய அடையாளம்நாஸி வணக்கமாகும். ஹிட்லரின் மறைவுக்கு பின்னர், ஹிட்லரையும் அவரது நாஸி வணக்கத்தையும் நினைவுபடுத்தும் எவ்வித செயலிலும் யாரும் ஈடுபடக்கூடாது என ஜேர்மன் அரசு கடுமையான சட்டத்தை இன்றளவும் பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

# 25 கிலோ தங்கத்தை கடத்திய கில்லாடி

இந்தியாவுக்கு 25 கிலோ தங்கம் கடத்த முயன்ற நபரை பங்களாதேஷ் சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.
பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த ஜமீல் அக்தர் என்பவர், உடல் ஊனமுற்றவர் எனத் தெரிவித்து, எப்போதும் சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறே இந்தியாவுக்கு விமானம் மூலம் பயணம் மேற்கொண்டு வந்துள்ளார்.
எனினும் அவர் கடந்த 8 மாதங்களில் மட்டும் பங்களாதேஷில் இருந்து 13 முறை இந்தியாவுக்குச் சென்று வந்தமை, சுங்க அதிகாரிகளுக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியது.
இந்த நிலையில், நேற்றுக் காலை பங்களாதேஷ் விமான நிலையத்துக்கு குறித்த நபர் சக்கர நாற்காலியுடன் வந்தபோது, அவரைத் தடுத்து பரிசோதனைப் பகுதிக்கு அதிகாரிகள் அழைத்து சென்றனர். அங்கு நடத்திய சோதனையின்போது அவர் ஊனமுற்றவர் இல்லை என்பதும், அவரது தொடைகளில் 25 கிலோ தங்கம் மறைத்து வைத்திருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் வைத்திருந்த தங்கத்தின் மதிப்பு சுமார் 1.5 மில்லியன் டொலர் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.
இதனையடுத்து ஊனமுற்றவராக நடித்தவர் கைது செய்யப்பட்டார். (இ)



# சிசுவுக்கு போதை கைதானார் தாதி

இத்தாலி நாட்டில், பிறந்த சிசுவின் அழுகையை நிறுத்துவதற்காகப் போதை மருந்தைக் கொடுத்த செவிலியப் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
இத்தாலியில் உள்ள வெரொனா நகரில் வசித்து வரும் கர்ப்பிணி பெண் ஒருவர் மருத்துவமனையில் கடந்த மார்ச் மாதம் பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார்.
குழந்தை பிறந்ததும் பலமாக அழத் தொடங்கியதால் அதனைக் கட்டுப்படுத்த , கர்ப்பிணியைப் பராமரித்து வந்த தாதி முயன்றுள்ளார். ஆனால், குழந்தை தொடர்ச்சியாக அழுதுள்ளது.
எனவே அழுகையை நிறுத்துவதற்காக வலியைத் தீர்க்கும் மார்ஃபின் எனப்படும் போதை மருந்தை குழந்தைக்கு கொடுத்துள்ளார் தாதி.போதை மருந்து உடலில் கலந்ததும் குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. மருத்துவர்கள் உடனடியாகக் குழந்தைக்கு சிகிச்சை அளித்து, அதனைக் காப்பாற்றினர்.
சிகிச்சையின் போது, குழந்தையின் இரத்தத்தில் போதை மருந்து கலந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.
மருத்துவர்கள் நடத்திய விசாரணையில், பணியில் இருந்த அந்தத் தாதி 'குழந்தையின் அழுகையை நிறுத்த போதை மருந்து கொடுத்ததாக' ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.(இ)

# பாதிரியார் வேடத்தில் குற்றவாளி



கனடா நாட்டில் பாதிரியார் வேடத்தில் சிறுமிகளிடம் பாலியல் தாக்குதல் நடத்திய நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.
எட்மோண்டன் நகரில் ஜஸ்டின் ஜோர்ஜ் ஸ் ரீபன் கொலும்பே (வயது -33) என்ற பாதிரியார், சிறுமி ஒருவருக்கு சமூக வலைத்தளத்தில் ஆபாசமான தகவல்களை அனுப்பியதாக, பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் பொலிஸில் புகார் கொடுத்தார்.
இதனடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், குறித்த பாதிரியாராக இருப்பவர் உண்மையில் பாதிரியார் அல்லவெனவும், பாதிரியாராக வேடமிட்டு பலரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துபவர் எனவும் கண்டுபிடித்தனர். இதனையடுத்து பாதிரியார் வேடத்தில் இருந்த பாலியல் குற்றவாளி கைது செய்யப்பட்டார். அவர் மீது இதுவரை 12 பாலியல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. (இ)

# தமிழரின் சுயமரியாதையோடு விளையாடாதீர்கள்

## விஜய் ரீவிக்கு எச்சரிக்கையுடன் அறிவுரை கூறிய கமல்



'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் நேற்று இரவு, கமல்ஹாசன் எச்சரிக்கையுடன் கூடிய அறிவுரையை விஜய் நிர்வாகத்துக்கு வழங்கியிருந்தமை தமிழர்களைப் பெருமைப் பட வைத்துள்ளது.

அங்கு அவர் இது குறித்துப் பேசு கையில்,

'பிக் பாஸ்' விளையாட்டு உலகின் பல நாடுகளில் ஒளிபரப்பானாலும், ஹிந்தியில் பல பாகங்களைக் கடந்திருந்தாலும், அந்த அனுபவத்தில் விந்திய மலை தாண்டி இங்கு வரும்போது, அவர்கள் அனுகவேண்டிய முறை வேறு முறை.

"அது வேற இந்தியா இது வேற இந்தியா என்று சொல்லவில்லை. இந்த இந்தியாவுக்கு (தமிழ்நாடு) சுயமரியாதை கூடுதல். அப்படிப்பட்ட இந்தியாவில் எதை ஒளிபரப்ப வேண்டும் என்பதில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். இது எனது தனிப்பட்ட வேண்டுகோள். அது மக்களின் கட்டளையாக மாற முன் திருத்திக்கொள்ள வேண்டும்.

வேறு எங்கும் எதையும் பேசலாம். ஆனால் இங்கே பேசும்போது கவனமாகப் பேசவேண்டும்.

'எதிர் அரசியல்' என்று இது கருதப்பட்டு வழக்குப் போடப்பட்டாலும் சந்திப்பேன்" என்றார். (ஒ)



## ஒருபுறம் கொண்டாட்டம் மறுபுறம் திண்டாட்டம்

'பிக்பாஸ்' வீட்டிலிருந்து நேற்றுமுன்தினம் ஓவியா விலகினார். இது அனைவரையும் மிகவும் வருத்தப்பட வைத்தது.

இந்நிலையில் நேற்று சென்னையில் உள்ள பிரபல மால் ஒன்றுக்கு ஓவியா சென்றுள்ளார்.

அங்கு இவரைக் கண்ட ரசிகர்கள் பலரும் சூழ்ந்துகொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். பிறகு தங்கள் வாழ்த்துக்களை ஓவியாவுக்குக் கூறியுள்ளனர்.


இவ்வாறு ரசிகர்களைத் தொடர்ந்து சந்தித்து வரும் அவர், ஆரவ் மீதான காதலிலும் தீவிரமாக உள்ளார் என்பதை அவர் வெளியிடும் வார்த்தைகள் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றன.

இது ஒருபுறமிருக்க, நேற்றைய‌தினம் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜூலியின் பாடுதான் பெரும் திண்டாட்டமாகவுள்ளது.

அவர் வெளியே வந்ததும் அவரை ரசிகர்கள் திட்ட ஆரம்பித்துவிட்டனர். அதேவேளை, அவர் பரணியிடம் சென்று நடு வீதியில் வைத்து காலில் விழுந்து மன்னிப்பும் கோரினார்.

ஓவியா ஒரு பக்கம் கொண்டாட மறுபக்கம் ஜூலி திண்டாடுகிறார்.

இவர்கள் இருவரதும் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களே தற்போது இணையங்களில் வைரலாகிவருகின்றன. (ஒ)



## அஜித் ரசிகர்களுக்கு காத்திருக்கும் விருந்து

அஜித் ரசிகர்களுக்கு இன்று மாலை பெரும் விருந்து காத்திருக்கிறது.

விவேகம் படத்தின் வெளியீட்டுத் திகதி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில், பாடல்கள் வெளிவரும் திகதி மற்றும் நேரம் என்பன அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி இன்று மாலை 5 மணிக்கு வழக்கம் Nghy SAAVN தளத்தில் அனைத்துப் பாடல்களும் வெளியாக வுள்ளன.

கூடுதலாக "வெறியேற" என்ற பாடல் அஜித் ரசிகர்களுக்கு மிகவும் பிடிக்கும் என கூறுகிறார்கள் படக்குழுவினர்.

இது குறித்த தகவலை சத்யஜோதி ஃபிலிம்ஸ் அவர்களுடைய அதிகாரபூர்வ ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளனர். (ஒ)





## ஏற்கமுடியவில்லை

உலகின் அதிவேக மனிதர் என்று அழைக்கப்படுபவர் ஜமைக்காவின் உசைன் போல்ட். இவர், 2008, 2012 மற்றும் 2016 ஒலிம்பிக்கில் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4X100 தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்று அசத்தியவர்.

இவர் தற்போது நடைபெற்றுவரும் லண்டன் உலக தடகள சம்பியன்ஷிப் தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்தார், இந்தப் போட்டியில் வெற்றி பெற்று முடிசூடா மன்னனாகத் திகழ்வேன் எனவும் சூளுரைத்தார்.

ஆனால், நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அதிர்ச்சியளிக்கும் வகையில் 3ஆவது இடத்தையே பிடித்தார். அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் முதல் இடத்தைப் பிடித்தார். இவர் இரண்டு தடவைகள் ஊக்கமருந்து பயன்படுத்தியதற்காக தடைபெற்றவர்.

இந்நிலையில், காட்லின் வெற்றி பெற்றது சரியான முறையல்ல என்று சர்வதேச தடகளச் சங்கத்தின் தலைவர் செபஸ்டியான் கோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செபஸ்டியான் கோ கூறுகையில்,

"இரண்டு தடவைகள் ஊக்கமருந்து பயன்படுத்தியதற்காகத் தடைபெற்ற ஒருவர், நம்முடைய பரிசைப் பெறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால், அவர் இங்கே பங்கேற்பதற்காகத் தகுதி பெற்றுள்ளார்.

இது சரியான முறையாகத் தெரியவில்லை. உசைனின் கருத்துக்கள் பொதுப்படையானது என நான் கருதுகிறேன். இந்தப் போட்டி அவரால் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கும்" என்றார். (ஐ)

# திக்கத்தை வீழ்த்தி சம்பியனானது விண்மீன்



அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்திவந்த உதைபந்தாட்டத் தொடரின் சம்பியனாக பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றிவாகை சூடியது.

நேற்று மாலை 5 மணிக்கு ஆரம்பமான இந்த இறுதிப் போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் மோதியது.

போட்டி ஆரம்பமான முதலாவது நிமிடத்தில் திக்கத்தின் கோல் எல்லைக்குள் புகுந்து விளையாடிய விண்மீன் கழகத்தின் முன்கள வீரர் காண்டீபன், 'கோர்னர்' உதையைத் தலையால் முட்டி கோலாக்க, ஆட்டம் விறுவிறுப்பானது.

பின்னர் ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் திக்கம் கழகத்தினருக்குக் கிடைத்த 'பனால்டி' உதை கோலாக்கப்பட ஆட்டம் சமநிலையானது.

பின்னர் விண்மீன் வீரர்களான நிஷாந்தன் மற்றும் காண்டீபன் ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட ஆட்டத்தின் முதல் பாதி 3:1 என்ற கோல்கணக்கில் முடிந்தது.

பின்னர் இரண்டாவது பாதியில் நிஷாந்தன் மற்றொரு கோலைப் போட்டார். இதனால் ஆட்டத்தின் முடிவில் விண்மீன் கழகம், 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது.

ஆட்ட நாயகனாக விண்மீன் வீரர் காண்டீபனும், தொடர் ஆட்ட நாயகனாக ஆயன்குட்டியும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ)


## கமல் மீது பாயும் காயத்திரி ரகுராம்

'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் அதிரடியாக பல திருப்பங்கள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், நேற்றைய நிகழ்ச்சியில் கமல்ஹாசன், காயத்திரி அதிகம் தவறான வார்த்தைகள் பயன்படுத்துகிறார் என அவரிடம் கூறியிருந்தார்.

இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சிக்காக வெளியிடப்பட்டுள்ள 'புரொமோ'வில்,

"கமல்ஹாசன் கேட்கும் வார்த்தைகள் எனக்கு கஷ்டமாக இருக்கிறது. என்னைச் சரி செய்ய என் அம்மாவுக்கு மாத்திரம்தான் உரிமை இருக்கிறது" என்று கோபமாகப் பேசுகிறார் காயத்திரி. (ஒ)



எதிரொலி
Ethiroli



# "இலங்கையைப் பயன்படுத்த மாட்டோம்"



இந்தியப் பெருங்கடலில் இலங்கையில் கேந்திர அமைவிடத்தை, சீனா தனது மூலோபாய மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளாது என்று, சீன தூதுவர் யி ஷியான் லியாங் தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுகத்தை நேற்று வந்தடைந்த சீனக் கடற்படையின் மருத்துவக் கப்பலான ஹெபிங்பாங்சோவை வரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். "ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இலங்கை மூலோபாய அமைவிட வாய்ப்பை அனுபவித்து வருகிறது. அதற்குக் காரணம், பட்டுப் பாதையின் நடுவில் இலங்கைத் தீவு இருப்பதேயாகும். உங்களின் முக்கியத்துவத்தை நீங்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகிறீர்கள்? உங்களிடம் உள்ள இந்த வாய்ப்பை எப்படி பயன்படுத்திக் கொள்ளப்போகிறீர்கள்? என்ற கேள்விகள் இருக்கின்றன. இதற்கான பிரதான பதில், அமைதி மற்றும் அபிவிருத்தியாகவே இருக்கிறது. இலங்கையில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு முயற்சிகள் ஒவ்வொன்றுக்கும் சீனா ஆதரவாக இருக்கும் என்றும் அவர் கூறினார். (உ)

# இன்றைய கருத்தோவியம்




# 293 ஆயுர்வேத வைத்தியர்கள் இணைப்பு

கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் புதிதாக 293 ஆயுர்வேத வைத்தியர்களைச் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பான விபரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சின் மேலதிக செயலாளர் எல்.எச். திலகரத்ன தெரிவித்தார்.

அடுத்த மாதம் இந்த நியமனங்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கும் முன்னிலைப் பட்டியலுக்கு அமைய நியமனம் வழங்கப்படும். தற்போது ஆயுர்வேத வைத்தியர்களாக தகுதி பெற்றுள்ள சுமார் 600 பேர் இருப்பதாக அமைச்சின் மேலதிக செயலாளர் எல்.எச்.திலகரத்ன மேலும் கூறினார். (உ)

# தங்கம் கடத்தியவர்கள் கைது

சட்டவிரோதமாக ஒருதொகை தங்கத்தை சென்னைக்கு கடத்த முற்பட்ட இரு இந்தியர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்து சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை விமான நிலைய சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை விமான நிலையப் பொலிஸார் மேற்கெண்டுவருகின்றனர். (உ)

# ரவிக்கு எதிராக வாக்களிப்பேன்



வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். கூட்டு எதிரணியைச் சேர்ந்த 32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்துள்ளனர். கூட்டு எதிரணியில் 52 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த போதிலும், 32 பேர் மாத்திரமே கையெழுத்திட்டுள்ளனர். மகிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்களின் கையெழுத்து இதில்இல்லை. ஏற்கனவே சில முக்கியமான வாக்கெடுப்புகளில் மகிந்த ராஜபக்ச பங்கேற்காத நிலையில், இந்த வாக்கெடுப்பிலும் அவர் பங்கேற்கமாட்டார் என்று கூறப்பட்டது. இந்த நிலையிலேயே, நாடாளுமன்றத்தில் தாம் நிச்சயமாக ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக வாக்களிப்பேன் என்று மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார். (உ)

### 35 அடி பள்ளத்துள் பாய்ந்து

# முச்சக்கர வண்டி விபத்து



நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் - நோர்வூட் பிரதான வீதியில் வனராஜா பிரதேசத்துக்கு அண்மித்த பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று நேற்று மாலை 35 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்கு உள்ளாகியது. அதில் பயணஞ்செய்த 02 பேர் படுங்காயமடைந்து கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த முச்சக்கர வண்டி மஸ்கெலியா பிரவுண்ஸ்வீக் பகுதியிலிருந்து ஹட்டன் நகரை நோக்கிசென்றுக் கொண்டிருந்த போது லொறி ஒன்றை முந்திச் செல்ல முற்படுகையில் எதிரே வந்த இன்னொரு லொறியுடன் மோதி இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் முச்சக்கரவண்டி பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. (உ)

# நிலத்தடி நீர் மட்டம் வீழ்ச்சி ஆபத்து குறித்து எச்சரிக்கை

எதிர்பார்த்த அளவு நீர் கிடைக்காமையினால் நிலத்தடி நீர் மட்டம் பாரிய அளவு குறைந்துள்ளதால் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது. வறட்சியினால் ஏற்பட்டுள்ள இந்த சவாலினை வெற்றி கொள்வதற்காக அனைவரும் தனித்தனியாக தங்கள் பொறுப்பினை நிறைவேற்ற வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தம்மால் நீக்கப்படும் பொலித்தீன் அல்லது பிளாஸ்டிக் போன்ற குப்பைகளை வீதியில் வீசுவதற்கு பலர் முயற்சிக்கின்றனர். மேலும் பலர் கழிப்பறை குப்பைகளை நீர்த்தேக்கங்களில் வீசுகின்றனர். இவ்வாறான முறையற்ற செயற்பாடு காரணமாக மக்களுக்கு தேவையான குடிதண்ணீர் இழக்கப்படுவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர்தெரிவித்துள்ளார். எனவே நீர்த்தேக்கங்களில் குப்பை கொட்டுவதைத் தவிர்க்குமாறும் நீரைப் பாதுகாக்குமாறும் பொது மக்களிடம்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ)



# குப்பையில் மின்சாரம்: இலங்கையில் நிலையம்

இலங்கையில் முதல் தடவையாகப் குப்பைகளை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் குப்பையின் பலம் என்ற வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இரண்டு நிலையங்களின் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் வியாழக்கிழமை கெரவளப்பிட்டியவில் ஆரம்பமாகும்.

இரண்டாயிரத்து 700 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த மின் நிலையங்களின் மூலம் 20 மெஹாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இரண்டு தனியார் நிறுவனங்கள் இதற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

இதற்கு இணைவாக புத்தளம் அறுவாக்காடு பிரதேசத்தில் தீங்கற்ற வகையில் குப்பை சேகரிப்பு மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (உ)

## நாளை நாளும் கோளும்

08.08.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 23ஆம் நாள்

பிரதமை பி.இ 12.51 வரை | அவிட்டம் பி.இ. 05.59 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 03.04-04.34 | சுபநேரம் 10.34-12.04 | எமகண்டம் 09.04-10.34

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பக்தி | வெற்றி | வரவு | ஏமாற்றம் | நிம்மதி | பணிவு | சிரமம் | இரக்கம் | வீண்செலவு | ஆரோக்கியம் | நலம் | தொல்லை |

எதிரொலி
Ethiroli

# தகவல் அதிகாரி யார் ? இணையத்தில் விபரம்

அமைச்சுக்கள், திணைக் களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செய லாளர் பிரிவுகள் உட்பட அரச நிறுவனங்களுக்கு தகவல் அதிகாரிகளை நியமிக்கும் பணியில் 95 சதவீதமானவை பூர்த்திய டைந்துள்ளதாக அரசாங் கம் குறிப்பிட்டுள்ளது. இதுதொடர்பாக தகவல் அறியும் பேரவையின் பணிப்பாளர் நாயகம் ஜய திஸ்ஸ ரணசிங்க தெரிவிக் கையில், தகவல் அறியும் அதிகாரி யொருவர் இல்லாத நிறு வனத்தின் தலைவர் உரிய அதிகாரியொருவரை நிய மிக்க கடமைப்பட்டுள் ளார். பொதுமக்கள் தக வல் அதிகாரிகள் தொடர் பான விபரங்களை இணை யத்தளத்தில் பெற்றுக்கொள் ளலாம். அதன் முகவரி www.rti.gov.lk என்பதாகும். தகவல் அறியும் சட்டத்தை வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்த மக்க ளின் ஒத்துழைப்பு அவசி யம் என்றும் அவர் வலி யுறுத்தினார். (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!




**1898.08.07**

யாழ்ப்பாணம் மானிப்பாயில் டாக்டர் ஸ்கொட் தலைமையில் மானிப்பாய் மருத்துவமனை புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

# கொலைச் சந்தேகநபர் பிடிபட்டார்!

கட்டான, தெம்மங் ஹந் திய பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒரு வரைக் கொலை செய்த சம்ப வத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். தோட்டம் ஒன்றில் காவலா ளியாகப் பணியாற்றி வந்த படல்கும்புர அமுனு கொட பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதான நபரே கொலை செய்யப்பட்டுள் ளார். தெம்மங் ஹந்திய பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான நபரே கொலை சம்பவம் தொடர்பில் சந் தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை நடந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (உ)

# 37 இலட்சம் பெறுமதியான ஹெரோயின் கடத்தல்

தாய்லாந்திலிருந்து கடத்தி வரப்பட்ட 37 இலட்சம் ரூபாய் பெறு மதியான ஹெரோயினு டன் பாகிஸ்தான் பிரஜை யொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று இரவு கைது செய்யப்பட்டுள் ளார். சந்தேக நபரிடமி ருந்து 376 கிராம் ஹெரோ யின் கைப்பற்றப்பட்டுள் ளதாக சுங்கத்திணைக்களப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார். பயணப் பொதிக்குள் சூட்சுமமான முறையில் ஹெரோயின் கடத்தி வரப்பட்டுள்ளதா கவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (உ)

# ஏ.பி.எல். சம்பியன் றேஞ்சர்ஸ் வசம்




அரியாலை பிரீமியர் லீக் கிரிக் கெட் தொடரில் அரியாலை றேஞ் சர்ஸ் அணி, சுப்பர் ஓவரில் அசத்தி, சம்பியனானது.

11 பேர் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட அரி யாலை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற் றுப் போட்டி, நேற்று முன் தினமும், நேற்றும் நடைபெற்றது. இதில் முதல் சுற்றுக்களில் அபாரமாக விளையா டிய றேஞ்சர்ஸ் அணியும், ஃபயர் போல்ஸ் அணியும் இறுதிப் போட் டியில் சந்தித்தன.

நாணயச் சுழற்சியில் வெற்றி யீட்டிய, றேஞ்சர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத்தீர்மானித் தது. இதனால் முதலில் துடுப்பெடுத் தாடிய ஃபயர் போல்ஸ் அணி, 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 79 ஓட்டங்களை எடுத்து , 80 ஓட்டங் களை றேஞ்சர்ஸ் அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது. இதனைத் துரத்திய றேஞ்சர்ஸ் அணியும், 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 79 ஓட்டங்க ளையே பெற்றதால், வெற்றியைத் தீர்மானிக்க 'சுப்பர் ஓவர்' முறை பயன்படுத்தப்பட்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தா டிய றேஞ்சர்ஸ் அணி, 13 ஓட்டங்க ளைக் குவித்தது. 14 ஓட்டங்களை 6 பந்துகளில் பெற வேண்டிய அழுத் தத்தில் இறங்கிய ஃபயர் போல்ஸ் அணி, றேஞ்சர்ஸ் அணியின் மிரட் டும் பந்துவீச்சில் அடுத்தடுத்து இரு இலக்குகளையும் பறிகொடுத்து வெறும் 3 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் அரியாலை பிரீமியர் லீக் தொடரில் சம்பியனா னது றேஞ்சர்ஸ் அணி. ஆட்டநாய கனாக றேஞ்சர்ஸ் அணியின் யூட் நிரோஷன் தெரிவானார். (இ)

# துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு



யாழ். புனித பத்திசிரியார் கல்லூரியில் கல்வி கற்கும் இருபது வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. வட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூபா இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவிற்கு இவற்றினைக் கொள் வனவு செய்து வழங்கியிருந்தார். (உ)

# ரவியைக் காப்பாற்ற மகாநாயக்கர்கள் முயற்சி

வெளிவிவகார அமைச் சர் ரவி கருணாநாயக்கவை பாதுகாக்கும் முயற்சியில் சில மகாநாயக்க தேரர்கள் ஈடுபட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் ரவி கருணா நாயக்க மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது. அரசாங்கத்தில் இடம் பெற்று வரும் ஊழல் மோசடிகள், தேர்தல் நடத் தப்படாமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை கவனத்தில் எடுக்காது ரவி கருணாநாயக்கவை மட்டும் இலக்கு வைத்து அழுத்தங்களைப் பிரயோ கிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என மகாநாயக்க தேரர்கள் கருத்து வெளியிட் டுள்ளனர். ரவி கருணா நாயக்க மீது குற்றம் சுமத்து வதன் ஊடாக அரசாங்கத் தின் மீதான ஒட்டு மொத்த குற்றச்சாட்டுக்களும் புறந்தள்ளப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். (உ)

## திருப்பலி நிகழ்வு




மன்னார் பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று சிறப்பு திருப்பலி நிகழ்வு நடைபெற்றது.

## கிணற்றில் கிடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனம் தெரியாத பொருட்கள் இருப்பதை தூர் வாரும் பணியில் ஈடுபட்டவர்கள் அவதானித்தனர். பின்னர் அவற்றை மீட்டு மேற்பகுதிக்கு கொண்டுவந்தனர்.

இதன் போது இரண்டு கிளைமோர்க் குண்டுகள், கை குண்டு ஒன்று, மோட்டார்க் குண்டுகள் இருபது, தோட்டாக்கள், தோட்டாக்கள் அடங்கிய பெட்டிகள் ஐந்து உள்ளிட்ட பெருந்தொகையான வெடிபொருட் கள் மீட்கப்பட்டன.

இதனையடுத்து காணி உரிமையாளரால் அருகில் உள்ள இராணு முகாமுக்கு வெடிபொருட்கள் கிணற்றில் இருந்தமை பற்றி அறிவிக்கப்பட்டு, இராணுவத் தினரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு தெரியப் படுத்தப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸாரால் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் இன்று அனுமதி பெறப்பட்டு, மேலதிக தேடுதலுக்கும் செயலிழக்கச் செய்வதற்கும் கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினரிடம் அந்த வெடி பொருட்கள் ஒப்படைக்கப்படவுள்ளன. (இ)

## 48 மணித்தியாலத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று 10 பேரும், நேற்றுமுன்தினம் 3 பேருமாக 13 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை வடமராட்சி அல்வாய் வடக்குப் பகுதியில் மேற்கொள் ளப்பட்ட சுற்றி வளைப்பில் 18 பேர் கைது செய்யப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று மாலை 6.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை இடம்பெற்ற இச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 18 பேர் கைது செய்யப் பட்டனர். இதேவேளை கடந்தவாரம் கொக்குவில் பகுதியில் வைத்து கோப்பாய்ப் பொலிஸார் மீது மேற் கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர் புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இன்று காலை 06 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். (எ)

## விக்ரர் உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுபேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப் பிட்டபோதிலும் கைது செய்யப்பட்ட ஏனையவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. கொழும் பில் வைத்துக் கைது செய்யப்பட்ட நால்வரையும் யாழ்ப்பா ணம் அழைத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதாகத் தெரியவருகின்றது. பொலிஸார் மீதான வாள்வெட் டுச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே தற்போது மேலும் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 07.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.